இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNPA606– விசேட தேவைகள் சார் கல்வியில் உதவி மற்றும் மாற்றீட்டுத் தொழில்நுட்பங்கள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 26.02.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 4.30

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. (அ) "உதவி தொழில்நுட்பச் சாதனங்கள்" (Assistive Technology Devices) மற்றும் "உதவி தொழில்நுட்பச்சேவைகள்" (Assistive Technology Service) ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி சுருக்கமாக விளக்குக.

   **(20 புள்ளிகள்)**

   (ஆ) பின்வரும் பகுதிகளின் கீழ் பல்வகைமை இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கான உதவித் தொழில்நுட்பங்களின் நன்மைகளை எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

   - தினசரி வாழ்க்கை
   - தொடர்பாடல்
   - கல்வி
   - சமூகப் பயன்பாடு

   **(40 புள்ளிகள்)**

   (இ) இலங்கைச் சூழலில் இயலாமைகளையுடைய பிள்ளைகளுக்கான உதவித் தொழில்நுட்பச் சாதனங்கள் மற்றும் அவை தொடர்பான சேவைகளை பெற்றுக் கொள்வதில் பங்குதார்ர்கள் எதிர்கொள்ளும் சவால்களை பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி விவரிக்குக.

   **(40 புள்ளிகள்)**

2. (அ) வாசிப்பு, எழுதுதல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றில் விசேட கல்வி தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் உதவித் தொழில்நுட்பத்தின் வகைகளை விளக்குக.

   **(20 புள்ளிகள்)**

   (ஆ) உயர் - தொழில்நுட்ப உதவித் தொழில்நுட்பங்கள் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்குவாசிப்பு, எழுதுதல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றில் துணைபுரியும் என்பதை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக.

   **(40 புள்ளிகள்)**

(இ) விசேட தேவைகள் சார் கல்வி தொடர்பாக உதாரணங்களை மேற்கோள் காட்டி இலங்கைச் சூழலில் உதவி தொழில்நுட்பக் கொள்கை மற்றும் கொள்கை அமுலாக்கத்தின் வளர்ச்சியில் எழக்கூடிய முக்கிய பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்க.

**(40 புள்ளிகள்)**

3. (அ) உடல் சார் இயலாமைகளையுடைய பிள்ளைகளின் நடமாட்டத்திற்கான தடைகளை உதவி தொழில்நுட்பங்கள் எவ்வாறு குறைக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி சுருக்கமாக விளக்குக.

**(20 புள்ளிகள்)**

(ஆ) உயர் தொழில்நுட்ப உதவிச் சாதனங்களின் உதவியுடன் புலன்சார் குறைபாடுள்ள நபர்கள் எவ்வாறு தகவல்களை அணுகலாம் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(40 புள்ளிகள்)**

(இ) உள்ளடங்கல் வகுப்பறைகளில் உலகலாவிய கற்றல் வடிவமைப்பினை (UDL) செயல்படுவதற்கு உதவித் தொழில்நுட்பங்கள் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(40 புள்ளிகள்)**

4. (அ) "தாராளமயப்படுத்தப்பட்ட மற்றும் மாற்றியமைக்கப்பட்ட தொடர்பாடல்" (Augmentative and Alternative Communication) முறைமை உதவி தொழில்நுட்பங்களின் ஒரு பகுதியாகும்."
உதாரணங்களை மேற்கோள் காட்டுவதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட கூற்றை நியாயப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

(ஆ) வெற்றிகரமான தொடர்பாடலுக்கான அடிப்படை கூறுகளை ஆராய்ந்து, தொடர்பாடலிற் சிக்கல்கள் உள்ள மாணவர்கள் எதிர்கொள்ளும் கற்றல் தடைகளை எடுத்துக்காட்டுக்களுடன் விவரிக்குக.

**(40 புள்ளிகள்)**

(இ) ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனம் உள்ள குழந்தைக்கான மாற்றீட்டுத் தொடர்பாடலின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவித் தொழில்நுட்பங்கள் உதவுகின்றன என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(40 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*